# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 06/மா/2026

நாள் 11.08.2026

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையர், மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி.

(2) Dr. சுஜாதா ஜெயக்குமார்,
உரிமையாளர்,
ஆதித்யா மருத்துவமனை,
மதுரை. --- எதிர்மனுதாரர்கள்

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 15.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.11.2023 அன்று பெறப்பட்டு 06/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 15.11.2023 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாநகராட்சி மண்டலம்–5 (மேற்கு) திருநகர், ஹார்விபட்டி பஸ் ஸ்டாப் அருகிலுள்ள GST மெயின் ரோடு கதவு எண் 277–ல் இயங்கிவரும் ஆதித்யா மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்ட மருத்துவமனை 24 x 7 மணி நேரமும் செயல்பட்டு வரும் மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை கட்டடம் அனுமதி பெற்ற வரைபடத்தை விட கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது (deviation). மேற்படி ஆதித்யா மருத்துவமனை கட்டடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கு (Parking Space) இடம் விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் வாகனங்களை சாலையில் நிறுத்துவதினால் வாகன நெரிசல் ஏற்படுகிறது. மேலும் இம்மருத்துவமனை கட்டடத்திற்கு கிழக்கு புறம் 90

அடி அகலம் கொண்ட வைகை நதியின் கிளை ஓடை செல்கிறது இந்த ஓடையின் கரையை ஒட்டி மருத்துவமனை கட்டடம் கட்டப்பட்டுள்ளது (G.O.Ms.No. 111 Housing and Urban Development (UD4(3) Department Dated: 22.6.2017) அரசாணை பத்தி 5–ல்–9ல் உள்ளபடி நீர்நிலை (Water Body) பகுதியில் இருந்து 15 மீட்டர் அதாவது 55 அடி இடைவெளிவிட்டுதான் கட்டடம் கட்டப்படவேண்டும். ஆனால் ஆதித்யா மருத்துவமனை கட்டடம் ஓடையின் கரையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டம் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி ஆதித்யா மருத்துவமனை கட்டடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு, சட்டம் 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறவில்லை. மேற்படி மருத்துவமனை 2000 சதுரடிக்கு மேல் கட்டப்பட்டுள்ளதால் உள்ளூர் திட்ட குழுமத்தில் அனுமதி பெறவேண்டும். ஆனால் LPA வில் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஆதித்யா மருத்துவமனை கட்டடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம் 1965–பிரிவு 2(8)–ன்படி வருவாய் துறையிடம் முறையான அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இதே உதவி ஆணையர் மண்டலம் 5 (மேற்கு) திருப்பரங்குன்றம், மதுரை–5 அவர்களுக்கு ஆணை எண் 210/மா/2023 நாள் 2.9.2023 உத்தரவில், மண்டலம் 5ற்கு உட்பட்ட இடங்களில் விதி மீறி கட்டப்பட்டு வரும் கட்டடங்களை கள பணியாளர்களை ஆய்வு பணியில் ஈடுபடுத்தி விதி மீறி கட்டப்பட்டுவரும் கட்டங்களின் உரிமையாளர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு மண்டலம் 5–ன் உதவி ஆணையருக்கு உத்தரவிட்டு இருந்தும் மேற்படி ஆதித்யா மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி மருத்துவமனை உரிமையாளர் அவர்களிடம் ஏதோ பலனை பெற்று கொண்டு தன் கடமையை சரிவர செய்ய தவறிவிட்டார். மேலும் ஆதித்யா மருத்துவமனை கட்டடத்தின் விதிமீறல் குறித்து புகார் மனுவை 21.09.2023 தேதியில் பதிவு தபால் (RT 47588 6911 IN) அனுப்பி இருந்தும் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாடு அரசு ஆணை எண் 99 ப.நி.சீ.துறை நாள் 21.9.2015ன்படி புகார் மனு மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்து புகார் மனுதார்களுக்கு எடுத்த நடவடிக்கையின் விபரத்தை தெரிவிக்க வேண்டும் ஆனால் உதவி ஆணையர் மண்டலம் 5 (மேற்கு) அவர்கள் அரசாணையை மதிக்கவில்லை. எனவே மேற்படி உதவி ஆணையர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணை எண் 210/மா/2023 நாள் 2.9.2023–ன் உத்தரவின்படி விதிமீறல் கட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்காமலும், தமிழக அரசாணை எள் 99 நாள் 21.9.2015ன்படி புகார் கட்டங்களின்மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்காத மண்டலம் 5 (மேற்கு) திருப்பரங்குன்றம் மதுரை–5 அவர்கள் மீது கடுமையான துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி ஆதித்யா மருத்துவமனை கட்டடம் விதிகளுக்கு மாறாக கட்டடம் கட்டியும் 90அடி அகல நீர் ஓடை கரையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டியும், மருத்துவமனைக்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set Back) விடாமலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமலும், மருத்துவமனை வர்த்தக கட்டடம் என்பதால் LPA உள்ளூர் திட்ட குழுமத்தில் அனுமதி பெறாமலும் மற்றும் வருவாய்துறையினரிடம் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டுவரும் மருத்துவமனை கட்டத்தின் மீது தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.1.2023 மற்றும் நகர்

ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்21724/2016/BA2 நாள்3.1.2017–ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன்படி Stop work notice/notice calling for approval Plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal and demolition Notice (Remove) வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிக தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 02.01.2024 நாளிட்ட கடிதம் மற்றும் 21.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையர் (மேற்கு)–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி ஆணையர் தனது 14.05.2026 மற்றும் 13.07.2026 நாளிட்ட கடிதங்கள் ம5/ஈ1/006881/2023–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"21.01.2026 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அறிவிப்புடன் இணைத்து வரப்பெற்ற திரு R மயில்சாமி என்பவரின் 15.11.2023ம் நாளிட்ட மனுவிற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவம் ஆணை எண் 210/மா/2023, 2.9.2023ம் நாளிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரம் 01.12.2023 நாளிட்ட கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவம் 31.7.2023ம் நாளிட்ட கடிதத்திற்கு உரிய விபரம் தெரிவித்து 14.8.2023ம் நாளிட்ட கடிதம் வாயிலாக தங்களுக்கு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதனை தொடர்ந்து மதுரை சர்க்யூட் ஹவுசில் (Circuit House) 21.8.2023 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற விசாரணையில் நேரில் ஆஜராக கேட்டுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து திரு மயில்சாமி என்பவரது கோப்புகள் தொடர்பாக ஆவணங்கள் மற்றும் நடவடிக்கை மேற்கொண்ட விபரங்கள் அனைத்தும் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணையில் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக மண்டலம்–5க்குட்பட்ட அனைத்து வார்டு உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு குறிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 02.09.2023 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணைக்கு உரிய விபரம் தெரிவித்து 01.12.2023ம் நாளிட்ட கடிதம் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய புகார் குறித்து 21.09.2023ம் நாளிட்ட மனுதாரரின் தகவல் அறியும் உரிமை சட்ட மனுவிற்கு, 18.10.2023ம் நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் விரிவான தகவல் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 6.11.2023ந் தேதிய தகவல் அறியும் சட்டம் 2005 பிரிவு 19(1)–ன்கீழான மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிற்கு 12.12.2023ந் தேதியில் உரிய தகவல் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 6.11.2023 தேதிய தகவல் அறியும் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் கீழான மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிற்கு 12.12.2023ந் தேதியில் உரிய தகவல் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரரின் தமிழ்நாடு தகவல் ஆணையத்திடம் அளிக்கப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனு எண் SA No. 003028/2023 க்கு ஆணையத்தின் 3.10.2024ம் நாளிட்ட நேரடி அறிவுரையின்படி, 5.3.2025ம் நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் உரிய விவரம் பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

23.06.2026ம் தேதிய தங்களது கடிதத்தில் இவ்வழக்கு தொடர்பாக விசாரணைக்கு 14.07.2026 அன்று முற்பகல் 11 மணியளவில் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராக ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உதவி பொறியாளர் (திட்டம்) குறிப்பின்படி, மண்டலம்–5 வார்டு எண்–95, ரீசர்வே எண் 148/1 GST மெயின் ரோட்டில் உள்ள ஆதித்யா மருத்துவமனை கட்டிடத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு விதி 35) பிரிவு 135(1, 2)–ன்கீழ் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறுதலாகவும் கூடுதலாகவும் உள்ள கட்டிடத்திற்கு 13.02.2026 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு விதிகள் 2022, பிரிவு 56, 57ன்கீழ் படிவம் I (25.03.2026), படிவம் II (02.04.2026) மற்றும் படிவம் IV (15.04.2026) வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளர் மேற்கண்ட கட்டிடத்தை முறைப்படுத்த நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் (DTCP) நிர்வாகத் துறையிடம் விண்ணப்பித்து தாக்கல் செய்துள்ளதாக 30.04.2026 அன்று கடிதம் உதவி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். மேலும் தற்போது 02.07.2026 அன்று Chief Secretary, Secretariat, Chennai அவர்களுக்கு மேல்முறையீடு செய்துள்ளார்.

மேலும் தமிழ்நாடு தகவல் ஆணையம் நாள் 24.10.2025ல் மனுதாரர் ஆன திரு. மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் மருத்துவமனைகளின் விபரங்களையும் தகவலாக அளிக்குமாறு கோருவதில் இச்சட்டத்தை தன் மனம் போன போக்கில் பயன்படுத்தி பொது அதிகார அமைப்பின் செயல்பாடு மற்றும் அன்றாட பணிகளை குலைக்கலாம் என்ற பிற்போக்கு தன்மையும், சுயநலனுமே மேலோங்கி நிற்பதால் அவரின் அனைத்து வழக்குகளிலும் பொது நலன் ஏதும் இருப்பதாக இவ்வாணையம் கருதவில்லை என தனியரால் தொடரப்பட்ட 21 வழக்கினங்களுக்கு விசாரணையை முடித்து முற்றாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்ற விபரம் கூடுதலாக தங்களுக்கு கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தன்னுடைய 10.07.2026 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''முறையீட்டு மனு எண் 116/மா/2026, முறையீட்டு மனு எண் 138/ந/2026 மற்றும் ஆதித்யா மருத்துவமனை, திருப்பரங்குன்றம், மண்டலம் 5 ஆகிய மூன்று வழக்குகளிலும், 14.07.2026 ஆஜராகி விளக்கம் அளிக்க இயலாது. நான் 12.07.2026 முதல் 14.07.2026 தேதிகளில் தொழில் விசயமாக கேரளா மாநிலம் திருவனந்தபுரம் அருகில் பாரசாலை ஊருக்கு செல்ல வேண்டியுள்ளதால், நான் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்து கொள்கிறேன். மேலும் எனது முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படம் மற்றும் ஆவணத்தின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன். மேலும் மூன்று மருத்துவமனை கட்டிடங்களும் பக்க திறவிடங்கள் ஆறு மீட்டர் இடைவெளி இடம் (side set back) விடவில்லை. அதில் ஒரு அடி கூட இடைவெளி விடவில்லை. மேலும் வாகனம்

நிறுத்துவதற்கு இடம் விடவில்லை. தமிழ்நாடு மாவட்ட நகர் ஊரமைப்பு துறையில் உரிய திட்ட அனுமதி பெறவில்லை என்பதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57 கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவிப் பொறியாளர் 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு), ஹார்விபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் கதவு எண் 277, GST மெயின் ரோடு, திருநகர், மதுரை 5ல் இயங்கி வரும் ஆதித்யா ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அமைந்திருக்கும் இடம் முன்பு திருப்பரங்குன்றம் 3–ம் நிலை நகராட்சியாக உள்ள பகுதியில் இருந்துள்ளது. மேற்படி மருத்துவமனை கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதியினை திருப்பரங்குன்றம் மூன்றாம் நிலை நகராட்சி வழங்கியுள்ளது.

மேற்கண்ட மருத்துவமனை தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட கட்டிடம் ஆகும். இக்கட்டிடம் மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலகத்தால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வில் பின்வருமாறு அளவீடுகள் கண்டறியப்பட்டன.

| | அனுமதி பெறப்பட்டது சதுரடியில் | அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டது சதுரடியில் |
|---|---|---|
| தரைத்ததளம் | 1864 | 4101.6 |
| முதல்தளம் | 1864 | 4101.6 |
| இரண்டாம் தளம் | 2120 | 4101.6 |
| அடிதளம் ரூம் | -- | 450 |
| மொட்டை மாடி Head Room | -- | 420.5 |

அனுமதி பெறப்பட்டது 5848 சதுரடி ஆனால் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட 13175.3 சதுரடியாகும்.

மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் சுமார் 7000 சதுரடிக்கு மேல் விதி மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. அதன்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) பிரிவு 135 (1, 2)–ன் கீழ் கட்டிட வரைபட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்டுள்ளதற்கு 13.02.2026 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு விதிகள் 2022 கீழ் படிவம்–1 (25.03.2026), படிவம்–2 (02.04.2026) மற்றும் படிவம் – 4 (15.04.2026) ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனை மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக வைகை நதியின் கிளை ஓடையில் இருந்து பொதுப்பணி துறை அளவீடு செய்த தூரத்திலிருந்து சுமார் 10 அடி முன்பாகவே கட்டப்பட்டுள்ளது.

தற்போது மனுதாரர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 80A-கீழ் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு மனு செய்துள்ளார்.

மனுதாரரரின் கட்டிடத்தின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை வழங்கும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் அவரது கணவர் Dr.B. ஜெயகுமார் என்பவர் 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை–6, திருநகர் ஜி.எஸ்.டி பிரதான சாலை, கதவு எண்.277ல் அமைந்துள்ள எங்களது ஆதித்யா சிறப்பு மருத்துவமனை 2003ம் ஆண்டு துவங்கப்பட்டது. அப்போது அக்கட்டிடத்திற்கு அப்போதைய பஞ்சாயத்தால் அனுமதி பெறப்பட்டது.

தற்போது மதுரை மாநகராட்சி, மண்டலம்–5ன் அலுவலகத்தால் எங்கள் மருத்துவ மனைக்கு விதி மீறல் இருப்பதாக தாக்கீதுகள் வழங்கப்பட்டது தொடர்பாக எங்கள் மருத்துவமனை சார்பாக தமிழக அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 80A-ன் கீழ் விண்ணப்பம் அளித்துள்ளோம் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

8. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், முதலாம் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) ஆகியோரின் அறிக்கைகள், மதுரை மாநகராட்சி தரப்பில் ஆஜரான மண்டலம் 5ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான இரண்டாம் எதிர்மனுதாரரின் கணவர் Dr.B. ஜெயகுமார் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம்–5 (மேற்கு) திருநகர், GST மெயின் ரோடு, கதவு எண் 277–ல் இயங்கிவரும் ஆதித்யா மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும், 90அடி அகலத்திற்கு நீர் ஓடை கரையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டியும், மருத்துவமனைக்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set Back) விடாமலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமலும், மருத்துவமனை வர்த்தக கட்டடம் என்பதால் உள்ளூர் திட்ட குழுமத்தில் (LPA) அனுமதி பெறாமலும் மற்றும் வருவாய்துறையினரிடம் உரிமம் பெறாமல் செயல்பட்டுவரும் மருத்துவமனை கட்டத்தின் மீது தமிழ்நாடு அரசாணை எண். 7, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 10.1.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்21724/2016/BA2 நாள்3.1.2017–ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன்படி Stop work notice/notice calling for approval Plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal and demolition Notice (Remove) வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம் 5 (மேற்கு), ஹார்விபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் கதவு எண் 277, GST மெயின் ரோடு, திருநகர், மதுரை 5ல் இயங்கி வரும் ஆதித்யா ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடதிற்கான கட்டிட வரைபட அனுமதியினை திருப்பரங்குன்றம் மூன்றாம் நிலை நகராட்சி வழங்கியுள்ளது என்பதும், மேற்கண்ட மருத்துவமனை தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட கட்டிடத்தினை மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்களின் கள ஆய்வில், கட்டிட அனுமதி பெறப்பட்ட 5848 சதுரடிக்கு பதிலாக, அனுமதிக்கு மாறாக 13175.3 சதுரடியில் கட்டப்பட்டதில், 7000 சதுரடிக்கு மேல் விதி மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது

என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு விதி 35) பிரிவு 135 (1), (2)–ன் கீழ் கட்டிடம், வரைபட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்டுள்ளதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு விதிகள், 2022, கீழ் படிவம்–1, படிவம்–2 மற்றும் படிவம்– 4–ல் அறிவிப்புகள் வழங்கப்பட்டது என்பதும், மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக வைகை நதியின் கிளை ஓடையில் இருந்து பொதுப்பணி துறை அளவீடு செய்த தூரத்திலிருந்து சுமார் 10 அடி முன்பாகவே கட்டப்பட்டுள்ளது என்பதும், தற்போது இம்மருத்துவமனை உரிமையாளர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80A-கீழ் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு மனு செய்துள்ளதால், அத்துறை வழங்கும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் தரப்பில் உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) ஆகியோரின் அறிக்கைகள், மண்டலம் 5ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை–6, திருநகர் ஜி.எஸ்.டி பிரதான சாலை, கதவு எண்.277ல் அமைந்துள்ள தங்களது ஆதித்யா சிறப்பு மருத்துவமனை 2003ம் ஆண்டு துவங்கப்பட்டு, இக்கட்டிடத்திற்கு அப்போதைய பஞ்சாயத்தால் அனுமதி பெறப்பட்டது என்பதும், தற்போது மதுரை மாநகராட்சி, மண்டலம்–5ன் அலுவலகத்தால் தங்கள் மருத்துவமனைக்கு விதி மீறல் இருப்பதாக தாக்கீதுகள் வழங்கப்பட்டது தொடர்பாக மேற்கண்ட மருத்துவமனை சார்பாக தமிழக அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80A-ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான இரண்டாம் எதிர்மனுதாரரின் கணவர் Dr.B. ஜெயகுமார் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம்–5 (மேற்கு) திருநகர், GST மெயின் ரோடு, கதவு எண் 277–ல் இயங்கி வரும் ஆதித்யா மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும், நீர் ஓடை கரையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டியும், மருத்துவமனைக்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set Back) விடாமலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமலும், மருத்துவமனை வர்த்தக கட்டடம் என்பதால் உள்ளூர் திட்ட குழுமத்தில் (LPA) அனுமதி பெறாமலும் மற்றும் வருவாய்துறையினரிடம் உரிமம் பெறாமல் செயல்பட்டுவரும் மேற்கண்ட மருத்துவமனை தொடர்பாக, மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–னால் தாக்கீதுகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட மருத்துவமனை சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80 (A)–ன் கீழ் விண்ணப்பம் அளித்துள்ளார்கள் என்று முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ள நிலையில், இப்பொருட்பாடு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது:–

xxx xxx

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu

Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals. xxx xxx xxx."

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்ய இரண்டாம் எதிர்மனுதாரர், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–அன்கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்து அம்மனு அரசின் பரிசீலனையில் உள்ளதாக முதலாம் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் தனது வாக்குமூலத்திலும் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ள நிலையில், அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையாளர், மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி, மதுரை–625 005.

(4) Dr. J. சுஜாதா ஜெயகுமார்,
உரிமையாளர், ஆதித்யா சிறப்பு மருத்துவமனை,
கதவு எண் 277, GST பிரதான சாலை, திருநகர், மதுரை–625 006.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல் :</u>
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற
நடுவரின் தனிச்செயலர்,

இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.